**செய்தி வெளியீடு எண்.45** **நாள்.10.06.2020**

## <u>பத்திரிக்கை செய்தி</u>

## <u>புதிய தொழில் முனைவோர், தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டம் (NEEDS)</u>

புதிய தொழில் முனைவோர், தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டம், ஆண்/பெண் பட்டதாரிகள் மற்றும் பட்டயதாரிகளை, "தொழில் முனைவோர்களாக்க", " புதிய தொழில் முனைவோர், தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம்" என்ற கடனுதவித் திட்டமானது தமிழக அரசால் 2012–13 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கடன் பெற விரும்புவோர் பட்டப்படிப்பு/ பட்டயப்படிப்பு / தொழில் நுட்பப்பயிற்சி (ஐடிஐ) இவைகளில் ஏதேனுமொன்றில் தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் நாளில் பெண்கள் / பட்டியல் இனத்தவர் / பழங்குடியினர் / பிற்படுத்தப்பட்ட / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர். திருநங்கையர், மாற்றுத் திறனாளிகள், முன்னாள் இராணுவத்தினர் ஆகிய சிறப்புப் பிரிவினர் 45 வயதுக்குட்பட்டவராயும், பொதுப் பிரிவினர் 35 வயதுக்குட்பட்டவராயும் இருக்க வேண்டும். குறைந்தது கடந்த மூன்று ஆண்டுகளாக தமிழகத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். முதல் தலைமுறை தொழில் முனைவோராயிருப்பது அவசியம்.

பத்து லட்ச ரூபாய்க்கு குறையாமலும், ஐந்து கோடி ரூபாய்க்கு மிகாமலும் திட்ட மதிப்பீடு கொண்ட உற்பத்தி / சேவை நிறுவனங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் கடனுதவி பெறலாம். திட்ட மதிப்பீட்டில் அதிகபட்சமாக ரூ.30 இலட்சத்தை உள்ளடக்கிய 25% மானியமும், வங்கியினரிடமிருந்து பெற்ற கடனுக்கென செலுத்தப்படும் வட்டித்தொகையில் 3% பின்முனை வட்டி மானியமும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வருகிறது. கடனுதவிக்கென நேர்காணலில் தேர்வு செய்யப்பட்டு வங்கிக்குப் பரிந்துரைக்கப்பட்டு, வங்கியிடமிருந்து ஒப்புதல் பெற்ற நபர்கள் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் 15 நாட்கள் தொழில் முனைவோர் பயிற்சியில் தவறாது கலந்துகொள்ள வேண்டும்.

நடப்பு நிதியாண்டு 2020–21ல் 48 நபர்களுக்கு ரூ. 472 இலட்சம் மானியம் வழங்க சென்னை மாவட்டத்திற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே தொழில் முனைய ஆர்வமுடைய, மேற்குறிப்பிட்ட தகுதிகளையுடைய முதல் தலைமுறை இருபால் தொழில் முனைவோர்களும் **www.msmeonline.tn.gov.in/needs** என்ற இணையதளத்தின் வாயிலாக விண்ணப்பத்தினை பதியுமாறும், மாவட்ட ஆட்சியரின் தலைமையில் நடைபெறும் நேர்காணலுக்கு அழைக்க பெறும்போது மேற்கண்ட இணையதளத்தில் பதியப்பட்ட விண்ணப்பத்தின் இரு நகல்களை உரிய அனைத்து இணைப்புகளோடும் நேர்காணலில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் இத்திட்டம் தொடர்பான விவரங்கள் பெற சென்னை மாவட்டம் கிண்டி தொழிற் பேட்டையில் அமைந்துள்ள மண்டல இணை இயக்குநர் (தொழில் மற்றும் வணிகத்துறை) அலுவலகத்தில் நேரிலோ அல்லது 044–22501621/22, 9788877322 என்ற தொலைபேசி மூலமாகவோ தொடர்புகொண்டு விவரங்கள் பெற்று பயன் அடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை–01